# பத்மனாபபுரம் நகராட்சி (திருத்தப்பட்டது)

## கசடுகழிவு மேலாண்மை உபவிதிகள்

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–ல் பிரிவு 306 உட்பிரிவு 5 (உ) மற்றும் உட்பிரிவு 6 (1920 தமிழ்நாடு சட்டம் 5)–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அறிவுரைகளின்படியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தம்) சட்டம் 1930 (1930–ம் தமிழ்நாடு சட்டம் 10)–ன் படியும் பத்மனாபபுரம் நகராட்சிக்குள் சட்டப்படியான வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் உள்ள கட்டிடங்களில் கழிவறைகள் மற்றும் நச்சுத்தொட்டிகள் கட்டுதல், பராமரித்தல் மற்றும் இவற்றில் இருந்து பெறப்படும் கசடு கழிவுகளை சேகரித்தல், இடம் பெயர்த்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பாக பத்மனாபபுரம் நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மற்றும் உபவிதிகள்.

இந்த உபவிதிகள் 2019ம் ஆண்டின் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் மற்றும் அரசாங்கத்தால் அவ்வப்போது அறிவிக்கப்படும் பிற கட்டிட விதிகளுடன் இணைத்து படிக்கப்பட வேண்டும்.

1. **துணை தலைப்பு, துவக்கம் மற்றும் ஏற்புடைமை**

   i. இந்த உபவிதிகள் பத்மனாபபுரம் நகராட்சிகசடுகழிவு மேலாண்மை உபவிதிகள் என அழைக்கப்படும்.

   ii. இந்த உபவிதிகள் கன்னியாகுமரி மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்ட அல்லது அரசால் தனிப்பட்ட முறையில் அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்

   iii. இந்த உபவிதிகள் பத்மனாபபுரம் நகராட்சியின் சட்டப்படியான வரையறைக்குட்பட்ட எல்லைக்குள் உள்ள குளியலறைகள், சலவை செய்யுமிடங்கள் / கழிவறைகள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்களைக் கொண்ட குடியிருப்புகள், வணிக நோக்கங்களுக்கான பயன்பாட்டில் உள்ளதும் அல்லது நிறுவன பயன்பாட்டில் உள்ள அனைத்து கட்டிடங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

( **1.**பார்க்கவும்: உபவிதி வரிசை எண் **9.** பாதுகாப்பு )

2. **விளக்கங்கள்**

இந்த உபவிதிகள் பத்தியில் உள்ள மேலும் தேவைப்படுகின்ற இனங்கள் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கான பொருள்கள் இங்கே விவரிக்கப்பட்டுள்ளன.

i. **"மேல்முறையீடு அமைப்பு"** என்பது இந்த உபவிதிகளில் கீழ் அறிவிக்கை மூலம் ஏற்படுத்தப்படும் அமைப்பு.

ii. **"சட்டப்படியான அதிகாரம் அல்லது உரிமை"** என்பது இந்த உபவிதிகளை நடைமுறைப்படுத்துதல் நோக்கங்களுக்காக நேரத்திற்கு நேரம் வெளியிடுகை. மாநகராட்சி/நகராட்சி / பேரூராட்சி அல்லது அந்த வகையிலான துறைகளுக்கு உட்பட்டவை.

iii. **"கசடுகழிவு"** என்பது பதனிடாத அல்லது பகுதியளவு செரிக்கப்பட்ட குழம்பு அல்லது திடதிரவக்கலவையாக உள்ள சேகரிக்கப்பட்ட, சேமிக்கப்பட்ட அல்லது சுத்திகரிக்கப்பட்ட வீட்டுக்கழிவு நீர் கலந்த அல்லது கலக்காத மலக்கழிவு மற்றும் சாக்கடை நீர் ஆகும். இது குழி கழிவறைகள் அல்லது நச்சுத்தொட்டிகளிலுள்ள திடமாக உள்ள அல்லது படிமானமடைந்த கலவையாகும்.

iv. “**செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு**” என்பது சுத்திகரிப்பு நிலையத்தை இயக்கி பராமரிக்கும் பொறுப்பிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு ஆகும்.

v. “**உரிமக்கட்டணம்**” என்பது கழிவு நீரகற்று வாகன இயக்குபவர்கள் தங்கள் வாகனத்தை இயக்குவதற்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தொகுப்பில் இயக்குவதற்கு உரிமம் பெறுவதற்காக ஆண்டு தோறும் செலுத்த வேண்டிய கட்டணம்.

vi. “**இயக்குபவர்**” என்பது கசடுகழிவு மற்றும் கழிவு நீர் ஆகியவற்றை சேகரித்து, எடுத்துச்சென்று அப்புறப்படுத்த உரிமம் பெற்ற ஒரு நபர், நிறுவனம், சுய உதவிக்குழு, தனியார் நிறுவனம் ஆகிய ஏதாவது ஒன்று ஆகும்.

vii. **தள சுகாதார அமைப்பு:** கசடு கழிவு மற்றும் கழிவு நீர் உற்பத்தியாகும் இடத்திலேயே அல்லது அதற்கு அருகில் சேகரிக்கப்பட்டு, தேக்கப்பட்டு மற்றும்/அல்லது சுத்திகரிக்கப்பட்டு அப்புறப்படுத்துதல் ஆகும்.

viii. “**சுகாதாரக்கழிவறை**” என்பது உள்ளாட்சி அமைப்புகளில் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல் நடைமுறைகள் மற்றும் வடிவமைப்புபடி பாதுகாப்பான முறையில் கசடு கழிவு சேகரித்து அப்புறப்படுத்துவதற்காக நச்சுத்தொட்டியுடன் அல்லது தள சுகாதார அமைப்புடன் அல்லது பாதாள சாக்கடைத்திட்டத்தில் இணைக்கப்பட்ட கழிவறை அல்லது சிறுநீர் கழிவறை எனப்பொருள்படும்.

ix. “**சுகாதாரமற்றகழிவறை**” என்பது கழிவறைகளில் உள்ள மலம் மனிதனால் அகற்றப்படுதல் விலங்குகளால் சுத்தப்படுத்துதல் மற்றும் மலக்கழிவுகள், முழுமையான மக்குவதற்கு முந்தைய கழிவுகள் தண்ணீர் ஊற்றி, வெளியேற்றி நேரடியாக குழிகள் அல்லது திறந்தவெளி வடிகால்களில் விடுதல் எனப்பொருள்படும்.

x. “**கழிவுநீர்**” என்பது நச்சுத்தொட்டி, வடிக்குட்டை அல்லது பிற தள சுகாதார அமைப்புகளில் சேகரிக்கப்பட்டுள்ள திரவ மற்றும் திட பொருளாகும்.

xi. “**நச்சுத்தொட்டி**” என்பது உள்ளாட்சி அமைப்புகளால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல் நடைமுறைகள், வடிவமைப்பு மற்றும் விபரங்கள் படி கட்டப்பட்டு கழிவுநீரினை திட பொருள் படிதல் மற்றும் காற்றுப்புகா செரிமானம் ஆகியவற்றின் மூலம் சுத்திகரிப்பு செய்யும் ஒரு நிலத்தடி தொட்டியைக்குறிக்கும்.

xii. “**குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள்**” என்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அல்லது இயக்குபவர்களுக்குச் சொந்தமான மோட்டார் பம்ப்புகள் மற்றும் சேமிப்புத் தொட்டிகள் பொருத்தப்பட்ட கழிவுநீர் வாகனம் அல்லது உறிஞ்சும் வசதியுடன் கூடிய வெற்றிட வாகனங்கள் ஆகும். இந்த வாகனம் நச்சுத் தொட்டியிலிருந்து கசடு கழிவுகளை எடுத்துச்சென்று வெளியேற்றுவதற்குத் தேவையான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் அவ்வப்போது வழங்கப்படும் வடிவமைப்பு மற்றும் விவரக்குறிப்புகளில் உள்ள வாகனமாகும்.

xiii. “**உரிமையாளர்**” என்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு கட்டிடத்திற்கோ அல்லது அதன் ஒரு பகுதிக்கோ சொந்தக்காரராக இருப்பவர்.

xiv. **"குடியிருப்போர்"** என்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு கட்டிடத்திலோ அல்லது அதன் ஒரு பகுதியிலோ வாடகைக்கு குடியிருப்பவர்.

xv. "**இயக்குதல் மற்றும் பராமரித்தல்**" என்பது கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்தில் நடைபெறும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் மற்றும் இது தொடர்பான அனைத்து பணிகள், வழங்கப்படும் சேவைகள் மற்றும் வசதிகள் ஆகியவை ஆகும்.

xvi. "**பயன்பாட்டு கட்டணம்**" என்பது ஒவ்வொரு முறை கசடு கழிவு அப்புறப்படுத்தும் நிலையத்திற்கு கசடு கழிவு மற்றும் கழிவு நீரை ஏற்றிச்செல்லும் போதும் இயக்குபவர் செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பிற்கு செலுத்த வேண்டிய கட்டணம் ஆகும்.

xvii. "**சுத்திகரிப்பு நிலையம்**" என்பது அவ்வப்போது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட்ட வடிவமைப்பு குறிப்புகள் மற்றும் வழிமுறைகளைக் கொண்டு கசடு கழிவு மற்றும் சாக்கடை கழிவு நீரை சுத்திகரித்துஅப்புறப்படுத்தும் திறனுள்ள சுத்திகரிப்பு நிலையம் ஆகும்.

xviii. "**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு**" என்பது பத்மனாபபுரம் நகராட்சியைக் குறிக்கும்.

xix. "**நகர உள்ளாட்சித் தொகுப்பு**" என்பது கசடு கழிவு சுத்திகரிப்பு அல்லது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை பயன்படுத்தும் பத்மனாபபுரம் நகராட்சி ,கோத நல்லூர் பேரூராட்சி,குமாரபுரம் பேரூராட்சி,விலவூர் பேரூராட்சி,திருவிதாங்கோடு பேரூராட்சி,முளகுமூடு பேரூராட்சி, வில்லுக்குறி பேரூராட்சி ,இரணியல் பேரூராட்சி, வேர்க்கிளம்பி பேரூராட்சி மற்றும் மாநில அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் பிற நகர உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவை அடங்கிய தொகுப்பு ஆகும்.

## 3. உரிமையாளர் அல்லது குடியிருப்போரினால் செயல்படுத்தப்பட வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் உடன்பாடுகள்:

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு முழு கட்டிடம் அல்லது அதன் பகுதியின் உரிமையாளர் அல்லது குடியிருப்போர் இந்த துணைவிதிகள் நடைமுறைக்கு வந்த தேதியில் இருந்து பின்வரும் கடமைகளைச் செய்ய பொறுப்பாகிறார்.

i. துணை விதிகளின்படி அதிகாரிகள் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்ட நேரத்திற்குள் கட்டிடங்களில் சுகாதாரமில்லாத கழிவறைகளின் பயன்பாடுகளை நிறுத்த வேண்டும் மற்றும் அருகிலுள்ள பொது வடிகால்/திறந்த நிலம்;/நிலைகளில் கழிவு நீரினை வெளியேற்றுவதை நிறுத்த வேண்டும். மற்றும் சுகாதாரமான கழிப்பறைகளை மட்டுமே தனக்குச் சொந்தமான அல்லது குடியிருக்கும் கட்டிடத்தில் கட்டி பயன்படுத்த வேண்டும்.

ii. கசடு கழிவுகள் நிறைந்து வெளியேறாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் நச்சுத் தொட்டிகளை சரியான முறையில் பராமரிக்க வேண்டும்.

iii. உரிய முன்னறிவிப்பு வழங்கப்பட்டு அதிகாரிகளால் தகுந்த காலங்களில் ஆய்வு மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

iv. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அறிவுறுத்தியுள்ளபடி நச்சுத் தொட்டி, வடிகுட்டை அல்லது பிற தள சுகாதார அமைப்புகளின் வடிவமைப்பு மற்றும் செயல்பாடுகளின்

தேவைக்கேற்ப குறிப்பிட்ட கால இடைவெளியில் கழிவுநீரகற்றும் செயல்பாடு நடைபெற வேண்டும்.

v. கசடுகழிவு மற்றும் கழிவுநீர் சேகரிக்க மற்றும் அப்புறப்படுத்த போக்குவரத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட இயக்குபவர்களையே ஈடுபடுத்த வேண்டும்.

**4. துணைவிதிகளின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் அமலாக்கம்:**

இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து பின்வரும் செயல்பாடுகளை செயல்படுத்த அதிகாரிகளுக்கு உரிமை உள்ளது.

i. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குள் அமைந்துள்ள கட்டிடங்களை கணக்கீடு மற்றும் ஆய்வு செய்தல் மற்றும் இந்த துணை விதிகளுக்கு இணங்கிஉள்ள கட்டிடங்களுக்கு இணைக்க சான்றிதழ் வழங்குதல்.

ii. இந்த துணை விதிகளுக்கு உட்பட்டு செயல்படாத மற்றும் இணக்கமில்லாத கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்போருக்கு அறிவிப்புகள் வழங்குதல்.

iii. தங்கள் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள நச்சுத்தொட்டி, கழிவுக்குட்டை அல்லது பிற தள சுகாதார அமைப்பு உள்ள கட்டிடங்களைப்பற்றிய தகவல்கள் அடங்கிய தகவல்தளம் பராமரித்தல்.

iv. துணைவிதிகளின் இணக்கத்தை செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.

v. கசடுகழிவு மற்றும் நச்சுக்கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு தொடர்பாக தகவல், கல்வி மற்றும் பரிமாற்ற பிரச்சாரத்தை நடத்துதல்.

vi. தங்களால் நகர உள்ளாட்சித் தொகுப்பு அல்லது செயல்படுத்தும் உள்ளாட்சி அமைப்பு எது பொருத்தமானதோ அதன்அதிகார எல்லைக்குள் இயக்கும் இயக்குபவர்கள் அனைவருக்கும் சுத்திகரிப்பு நிலையம் செயல்படும் நேரம், அப்புறப்படுத்தும் முறை, பயன்பாட்டு கட்டணம் மற்றும் குறிப்பிட்ட நேரங்களில் எந்தெந்த பாதைகளை தவிர்க்க வேண்டும் போன்ற விவரங்களை அறிவித்தல்.

vii. உரிமம் பெற்ற இயக்குபவர்களை நிர்வகித்து வழிகாட்டி, கண்காணித்தல். பொதுமக்களுக்கு வெளியிட்டு இயக்குபவர்கள் விதி மீறும் போது அவர்களைப்பற்றி பொதுமக்கள் புகாரளித்தல் /குறைதீர்க்கும் அணுகுமுறை பற்றிய விவரங்களையும் ஏற்படுத்துதல்.

viii. கசடு கழிவுகள் மற்றும் கழிவு நீர் ஆகியவற்றை சேகரித்தல், எடுத்துச்செல்லுதல் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்ளில் வெளியேற்றுதல் ஆகியவற்றை வழிகாட்டி, முறைப்படுத்தி மற்றும் கண்காணிப்பு செய்தல்.

ix. குறிப்பிட்ட வாகனங்களின் தரம் மற்றும் பராமரிப்பினை ஆய்வு செய்து முறைப்படுத்துதல்.

x. சேகரிக்கப்பட்டு சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படும் கசடுகழிவு மற்றும் கழிவுநீரின்; தரத்தினை ஆய்வு செய்தல்.

நகர உள்ளாட்சித் தொகுப்பு அல்லது செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பு எது பொருத்தமானதோ அதன் அதிகார எல்லைக்குள் இயக்கும் இயக்குபவர்கள் அனைவரும் தாங்கள் எடுத்துச் செல்லும் கசடுகழிவு மற்றும் கழிவுநீரை நேரடியாக சுத்திகரிப்பு நிலையத்தில் அனுமதித்தல் அல்லது அப்புறப்படுத்துதலை அனுமதிப்புது / உறுதிப்படுத்துவது.

xi. இந்த உபவிதிகள் செயல்பாட்டுக்கு வந்த நாளிலிருந்து நியாயமான கால அளவுக்குள் நகரஉள்ளாட்சித் தொகுப்பு அல்லது செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பு எது பொருத்தமானதோ அதனுடன் கசடுகழிவு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை 15.05.2020 தேதியிட்ட அரசாணை எண் G.O. (2D) 35—ன்படி கையொப்பமிடவேண்டும்.

xii. நகர உள்ளாட்சி அமைப்பிலுள்ள மக்கள் தொகைக்கேற்ப இந்த உபவிதிகளின் இணைப்பு A வில் கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்பாட்டின் அடிப்படையில் பொருத்தமான கட்டணத்தை சுத்திகரிப்பு வசதிக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு கட்டணமாக வழங்க வேண்டும்.

xiii. தங்கள் எல்லைக்குள் இயங்கும் இயக்குபவர்கள் செல்லத்தக்க உரிமம் பெற்றவர்களாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

xiv. இந்த துணைவிதிகளை மீறும் உரிமையாளர்கள், குடியிருப்போர், அல்லது இயக்குபவர்கள் மீது விசாரணை மேற்கொண்டு அபராதம் விதித்தல்.

**5. இயக்குபவர்களை நியமித்தல் மற்றும் இயக்குதல்**

i. இந்த உபவிதிகள் செயல்பாட்டுக்கு வந்த நாளிலிருந்து குறிப்பிட்ட காலத்திற்குள் சட்டப்படியான அதிகாரம் உள்ளவர் பத்மனாபபுரம் நகராட்சியில் விருப்பமுள்ள இயக்குபவர்களிடமிருந்து குறிப்பிட்ட நிதியாண்டுக்கு கழிவுநீரகற்றும் சேவைகள் வழங்குவதற்கான விண்ணப்பங்களை கோரி அறிவிப்பு வெளியிடலாம்.

ii. இயக்குபவர்கள் தங்கள் விண்ணப்பத்தை செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பில் சமர்ப்பித்து உரிமக்கட்டணமாக ரூ.1,000/— (ரூபாய் ஆயிரம் மட்டும்) அல்லது செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பு அவ்வப்போது குறிப்பிடும் தொகையை கட்ட வேண்டும்.

iii. விண்ணப்பங்களை பரிசீலித்து உரிமம் பெறுவதற்கான தகுதியுள்ள இயக்குபவர்களுக்கு அந்த நிதியாண்டுக்கான உரிமம் உபவிதிகளின் இணைப்பு B-ல் வழங்கப்பட்டுள்ள படிவத்தில் வழங்கப்படும்.

iv. செல்லத்தக்க உரிமம் இல்லாத இயக்குநர்கள் உபவிதிகளை மீறியவர்களாக கருதப்படுவர்.

v. அதிகாரிகள் அல்லது செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பு அவ்வப்போது வெளியிடும் வழிமுறைகளுக்கேற்ப இயக்குபவர்கள் அல்லது நகர உள்ளாட்சி அமைப்பு குறிப்பிட்ட வாகனங்கள் மற்றும் அதன் தொடர்புடைய உபகரணங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தலுக்கு பொறுப்பாகிறார்.

vi. அதிகாரிகள் அவ்வப்போது நிர்ணயிக்கும் செயல்திறக் தரத்திற்கேற்ப மற்றும் அறிவுறைகளுக்கேற்ப இயக்குபவர்கள் கட்டிடங்களிலிருந்து வெளியேறும் கசடுகழிவுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்து, எடுத்துச்செல்வதற்கு பொறுப்பாகிறார்.

vii. இயக்குபவர்கள் உரிம விதிகளுக்கு இணங்கி செயல்பட வேண்டும்.

viii. இயக்குபவர்கள் அல்லது நகர உள்ளாட்சி அமைப்புக்கு சொந்தமான குறிப்பிட்ட வாகனங்கள் தொழிற்சாலை கழிவுகளையோ அல்லது தொழிற்சாலை கழிவு கலந்த நீரையோ எடுத்துச்செல்லக்கூடாது.

ix. இயக்குபவர்கள் அனைத்து உள்ளார் சட்டங்களுக்கு இணங்கி இந்த உரிமத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட செயல்பாடுகளை செயல்படுத்துவதற்கு தேவையான அனுமதி மற்றும் உரிமங்களை பராமரிக்க வேண்டும்.

x. இயக்குபவர்கள் பயிற்சி பெற்ற நபர்களையே நியமித்து, கசடுகழிவுகள் மற்றும் கழிவு நீரை சேகரித்து எடுத்துச்செல்வதற்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு கருவிகளையும் வழங்க வேண்டும்.

xi. இயக்குபவர்கள் அல்லது நகர உள்ளாட்சி அமைப்பு அவ்வப்போது வழங்கும் செயல்திறன் தரத்தின்படி கசடுகழிவுகள் மற்றும் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு எடுத்துச்செல்வதை உறுதி செய்ய தேவையான அளவு நபர்களை நியமித்தல் வேண்டும்.

xii. மனிதக்கழிவுகளை அகற்ற மனிதர்களை பணியில் அமர்த்துவதை தடுத்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்விற்கான சட்டம் 2013 மற்றும் விதிகளின்படி எந்நேரமும் இணங்கி நடப்பதை இயக்குபவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

xiii. விபத்து நடைபெறும்போது அதிகாரிகளின் அறிவுரையின்படி அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் இயக்குபவர்கள் அல்லது நகர உள்ளாட்சி அமைப்பு செயல்படுத்த வேண்டும்.

xiv. அதிகாரிகளால் குறிப்பிடப்பட்டுள்ள சுத்திகரிப்புஇடங்களில் கசடுகழிவுகள் மற்றும் கழிவுநீர் பாதுகாப்பாக வெளியேற்ற இயக்குபவர் அல்லது நகர உள்ளாட்சி அமைப்பு பொறுப்பாகிறது.

xv. கசடுகழிவுகள் மற்றும் கழிவுநீரை சுத்திகரிப்பு இடத்தில் வெளியேற்ற இயக்குபவர்கள் ரூ.100/– அல்லது அவ்வப்போது செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பு குறிப்பிடும் கட்டணத்தை பயன்பாட்டு கட்டணமாக கட்ட வேண்டும்.

## 6. துணை விதிகளின் மீறலுக்கான அபராதம்:

அதிகாரிகள் இந்த துணை விதிகள் மீறலை கண்டு ஆராய்ந்து கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

i. கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவராக இருந்தால் அவர்களுக்கு அதிகாரி முன்னெச்சரிக்கை அறிவிப்பு வழங்கலாம். ஒவ்வொரு விதி மீறலுக்கும் ரூ.5,000.00 அல்லது அவ்வப்போது குறிப்பிடப்படும் தொகையினை அபராதமாக விதிக்க உரிமை உண்டு. உரிமையாளர் தொடர்ந்து இந்த துணை விதிகளை மீறினால், அவருக்கு ரூ.25,000.00 க்கு மிகாமல் அபராதம் விதிக்க அதிகாரிக்கு உரிமை உண்டு.

ii. கழிவுகசடு எடுத்துச்செல்லும் நிறுவனத்தை இயக்குபவராக இருந்தால் அவருக்கு அதிகாரி முன்னெச்சரிக்கை அறிவிப்பு வழங்கலாம் மற்றும் ஒவ்வொரு விதி மீறலுக்கும் ரூ.50,000.00அல்லது அவ்வப்போது குறிப்பிடப்படும் தொகையினை அபராதமாக விதிக்க உரிமை உண்டு. இயக்குபவர் தொடர்ந்து இந்த துணை

விதிகளை மீறினால் அவருக்கு ரூ.2,00,000.00 க்கு மிகாமல் அபராதம் விதிக்க அதிகாரிக்கு உரிமை உண்டு.

iii. இயக்குபவர் பத்தி 5, (v) (vii) முதல் (xiii) வரை உள்ள உபவிதிகளை மீறினால், முன்னெச்சரிக்கை அறிவிப்பு வழங்கி, உரிமத்தை ரத்து செய்யவும் அதிகாரிக்கு உரிமை உண்டு.

7. மேல்முறையீடு

i. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வந்த தேதியில் இருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு மேல் முறையீட்டு அமைப்பினை உருவாக்கி தேவையான அறிவிப்புகளை வெளியிட வேண்டும்.
ii. உரிமையாளர்,குடியிருப்போர் அல்லது இயக்குபவர்களுக்கு அதிகாரிகளால் வழங்கப்பட்ட காரணம்கேட்பு அறிவிப்பு கிடைத்த 30 நாட்களுக்குள் மேல் முறையீட்டு அமைப்பில் அறிவிப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்ய உரிமை உண்டு.
iii. மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்ட 15 நாட்களுக்குள் மேல் முறையீட்டு அமைப்பு தன்னுடைய விசாரணையைத் தொடங்கும்.
iv. அதிகாரிகள், உரிமையாளர் குடியிருப்போர் மற்றும் இயக்குபவர்கள் மேல் முறையீட்டு அமைப்பு எடுக்கும் முடிவுகளுக்கு இணங்க பொறுப்பாவார்கள்.

8. பிரச்சனைகளை நீக்குவதற்கான அதிகாரம்

இந்த துணைவிதிகளை நடைமுறைப்படுத்தும்போது பிரச்சனைகள் ஏற்பட்டால் பத்மனாபபுரம் நகராட்சி மன்றத்தின் ஆணைப்படி பிரச்சனைகளை நீக்க துணைவிதிகளில் திருத்தம் செய்து கன்னியாகுமரி மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டும்.

9. பாதுகாப்பு

இந்த துணைவிதிகளில் உள்ள ஏதாவது விதிகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 (தமிழ்நாடு சட்டம் V 1920) அல்லது தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டம் அல்லது தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிடங்கள் விதிகள் 2019 அதனுடைய அடுத்தடுத்த திருத்தங்கள் ஆகியவற்றில் பொருந்தாவிட்டால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 (தமிழ்நாடு சட்டம் V 1920) அல்லது தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டம் அல்லது தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிடங்கள் விதிகள் 2019 அதனுடைய அடுத்தடுத்த திருத்தங்களில் உள்ள குறிப்பிட்ட விதி மட்டுமே மேலோங்கி நிற்கும் ஏனைய துணை விதிகள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

---

ஆவடி நகர மாநகராட்சி சட்டம், 2019;: சென்னை நகர மாநகராட்சி சட்டம் 1919
கோயம்புத்தூர்நகர மாநகராட்சி சட்டம், 2081: திண்டுக்கல் நகர மாநகராட்சி சட்டம் 2013
ஈரோடு நகர மாநகராட்சி சட்டம், 2008;: ஓசூர் நகர மாநகராட்சி சட்டம் 2019
மதுரை நகர மாநகராட்சி சட்டம், 1971: நாகர்கோயில் நகர மாநகராட்சி சட்டம் 2019
சேலம் நகர மாநகராட்சி சட்டம், 1994: தஞ்சாவூர் நகர மாநகராட்சி சட்டம் 2013
தூத்துகுடி நகர மாநகராட்சி சட்டம், 2008: திருச்சிராப்பள்ளி நகர மாநகராட்சி சட்டம் 1994
திருநெல்வேலி நகர மாநகராட்சி சட்டம்,1994: திருப்பூர் நகர மாநகராட்சி சட்டம் 2008

# ANNEXURES

## Annexure Ato

## The Faecal Sludge and Septage Management Bye-Laws

## Faecal Sludge Treatment Plant O&M Fee – Formula

**Population of Host ULB or ULB**
[*Population of Padmanabhapuram*]

---

**Population of ULB Cluster**
[*Population of Padmanabhapuram Mucipality+ Population of* Kothanalloor Town Panchayat ,Kumarapuram Town Panchayat,Vilavoor Town Panchayat,Thiruvithancode Town Panchayat, Mulagumoodu Town Panchayat,Villukuri Town Panchayat , Verkilambi Town Panchayat, Eraniel Town Panchayat .

X

**O&M Cost of Treatment Facility Per Year**

**பத்மனாபபுரம் நகராட்சி**

கசடு கழிவு சேகரிப்பு, ஏற்றிச்செல்லுதல் மற்றும் அப்புறப்படுத்தும் பணிகளில் ஈடுபடும் தனியார் இயக்குநர்கள் மற்றும் வாகனங்களுக்கான உரிமம் வழங்குவதற்கான விண்ணப்பப் படிவம்.

இந்த உரிமம் உள்ளடங்கிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் : **பத்மனாபபுரம்** நகராட்சி

விண்ணப்ப எண்:

விண்ணப்பத்தின் வகை: புதியது/புதுப்பிப்பு

| | |
|---|---|
| இயக்குநர் பெயர் (தொழில் /வணிகத்தின் பெயர்) | |
| விண்ணப்பிப்பவர் பெயர் மற்றும் முகவரி | |
| வாகன உரிமையாளர்(கள்) பெயர் மற்றும் முகவரி வாகன உரிமையாளரும் விண்ணப்பிப்பவரும் வேறு வேறாக இருந்தால் இங்கே குறிப்பிடவும் | |
| தொடர்பு கொள்வதற்கான தகவல்கள் (அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி) | |

| வ. எண் | பதிவு எண் | பதிவு செய்த ஆண்டு | வாகனத்தின் வகை: டேங்க்குடன் கூடிய 4 சக்கர வெற்றிடடிரக் (வாக்கும் டிரக்) அல்லது டிராக்டர் அல்லது 3 சக்கர மினி டிரக், மற்றவை (வகையை குறிப்பிடவும்) | வாகனத்தின் கொள்ளளவு (லிட்டரில்) | கடந்த ஆண்டு உரிமம் பெறப்பட்டதா ? (ஆம் /இல்லை) |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |

மேலே குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் என் அறிவுக்கும் மற்றும் நம்பிக்கைக்கும் தெரிந்த அளவில் உண்மை என்று நான் சான்றளிக்கிறேன். மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நான் படித்து புரிந்து கொண்டேன் என்றும் அவற்றைக் கடைப்பிடிக்க ஒப்புக்கொள்கிறேன் என்றும் சான்றளிக்கிறேன்.

| | |
|---|---|
| கையொப்பம்<br>தேதி: | |

## <u>விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்</u>

1. சொற்பொருள் விளக்கங்கள்:

a. ''**விண்ணப்பம்**'' என்பது அந்தந்த நகர உள்ளாட்சி அமைப்பு (நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு) களால் ஒவ்வொரு கால கட்டத்திலும் வழங்கப்படும் குறிப்பிட்ட படிவத்தில் அளிக்கப்படும் விண்ணப்பம் ஆகும்.

b. "**அப்புறப்படுத்தும் வசதி**'' என்பது மாநகராட்சி, நகராட்சி அல்லது பேரூராட்சிகள் குறிப்பிடும் விளக்கங்களின் அடிப்படையில் அறிவியல் ரீதியாக கசடுகழிவு மற்றும் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து அப்புறப்படுத்த ஏற்படுத்தப்படும் அமைப்பு ஆகும்.

c. "**கசடுகழிவு**'' என்பது பதனிடாத அல்லது பகுதியளவு செரிக்கப்பட்ட குழம்பு அல்லது திடதிரவக்கலவையாக உள்ள சேகரிக்கப்பட்ட, சேமிக்கப்பட்ட அல்லது சுத்திகரிக்கப்பட்ட வீட்டுக்கழிவு நீர் கலந்த அல்லது கலக்காத மலக்கழிவு மற்றும் சாக்கடை நீர் ஆகும். இது குழி கழிவறைகள் அல்லது நச்சுத்தொட்டிகளிலுள்ள திடமாக உள்ள அல்லது படிமானமடைந்த கலவையாகும்.

d. "**செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு**'' என்பது சுத்திகரிப்பு நிலையத்தை இயக்கி பராமரிக்கும் பொறுப்பிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு ஆகும்.

e. "**உரிமக்கட்டணம்**'' என்பது கழிவு நீரகற்று வாகன இயக்குபவர்கள் தங்கள் வாகனத்தை இயக்குவதற்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தொகுப்பில் இயக்குவதற்கு உரிமம் பெறுவதற்காக ஆண்டு தோறும் செலுத்த வேண்டிய கட்டணம்.

f. "**இயக்குபவர்**'' என்பது கசடுகழிவு மற்றும் கழிவு நீர் ஆகியவற்றை சேகரித்து, எடுத்துச்சென்று அப்புறப்படுத்த உரிமம் பெற்ற ஒரு நபர், நிறுவனம், சுய உதவிக்குழு, தனியார் நிறுவனம் ஆகிய ஏதாவது ஒன்று ஆகும்.

g. "**கழிவுநீர்**'' என்பது நச்சுத்தொட்டி, வடிக்குட்டை அல்லது பிற தள சுகாதார அமைப்புகளில் சேகரிக்கப்பட்டுள்ள திரவ மற்றும் திட பொருளாகும்.h. "குறிப்பிட்ட வாகனம்'' என்பது கசடு கழிவு அல்லது கழிவு நீரை உறிஞ்சி ஏற்றிச்செல்ல நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அவ்வப்போது வழங்கும் விவரக்குறிப்பின்படி வடிவமைக்கப்பட்ட, ஒப்புதல் பெற்ற, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அல்லது இயக்குநரிடம் உள்ள டேங்குடன் கூடிய வெற்றிட டிரக் (வாக்கும் டிரக்) அல்லது மோட்டார் பம்ப் மற்றும் சேமிப்பு கலனுடன் (டேங்க்) இணைந்த அது போன்ற வாகனம் ஆகும்.

h. "**குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள்**'' என்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அல்லது இயக்குபவர்களுக்குச் சொந்தமான மோட்டார் பம்ப்புகள் மற்றும் சேமிப்புத் தொட்டிகள் பொருத்தப்பட்ட கழிவுநீர் வாகனம் அல்லது உறிஞ்சும் வசதியுடன் கூடிய வெற்றிட வாகனங்கள் ஆகும். இந்த வாகனம் நச்சுத் தொட்டியிலிருந்து கசடு கழிவுகளை எடுத்துச்சென்று வெளியேற்றுவதற்குத் தேவையான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் அவ்வப்போது வழங்கப்படும் வடிவமைப்பு மற்றும் விவரக்குறிப்புகளில் உள்ள வாகனமாகும்.

i. "**பயன்பாட்டு கட்டணம்**'' என்பது ஒவ்வொரு முறை கசடு கழிவு அப்புறப்படுத்தும் நிலையத்திற்கு கசடு கழிவு மற்றும் கழிவு நீரை ஏற்றிச்செல்லும் போதும் இயக்குபவர்

செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பிற்கு செலுத்த வேண்டிய கட்டணம் ஆகும்.

j. “**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு**” என்பது **பத்மனாபபுரம்** நகராட்சியைக் குறிக்கும்.

k. “**நகர உள்ளாட்சித் தொகுப்பு**” என்பது கசடு கழிவு சுத்திகரிப்பு அல்லது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை பயன்படுத்தும் **பத்மனாபபுரம்** நகராட்சி மற்றும் மாநில அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் பிற நகர உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவை அடங்கிய தொகுப்பு ஆகும்.

l. “**பணியாளர்கள்**” என்பது கசடு கழிவு மற்றும் கழிவு நீரை சேகரித்தல், எடுத்துச்செல்லுதல் மற்றும் அப்புறப்படுத்துதல் ஆகிய பணிகளைச் செய்வதற்கு உரிமம் பெற்றவர் பணியமர்த்தியுள்ள நபர்களைக்குறிக்கும்.

m. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் வரையறுக்கப்படாத சொற்கள் மற்றும் வாக்கியங்கள் அதற்கான வேறு சிறப்பு விளக்கம் தேவைப்படாவிட்டால், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளாக இருந்தால் தமிழ்நாடு மாநகராட்சி சட்டம் 1920 (தமிழ்நாடு சட்டம் 5, 1920)ல் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கங்களின் அடிப்படையிலும் மாநகராட்சிகளாக இருந்தால் மாநகராட்சி சட்டத்தின் அடிப்படையிலும் பொருள் கொள்ளப்பட வேண்டும்.

2. கசடு கழிவு மற்றும் கழிவு நீர் ஏற்றிச்செல்லும் மாநில அரசு அல்லது நஉஅ க்களுக்குச் சொந்தமான எந்த வகையான குறிப்பிடப்பட்ட வாகனம்(ங்கள்) அல்லது மாநில அரசு அல்லது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் நிரந்தரப் பணியாளர்களால் இயக்கப்படும் வாகனங்களுக்கு இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் உரிமம் பெறுவதற்கு விலக்கு அளிக்கப்படுகிறது.

3. உரிமம் பெற விலக்கு அளிக்கப்பட்ட துணை விதி 2, ன் கீழ் வரும் துறைகள் அல்லது நிறுவனங்கள் கசடு கழிவு அப்புறப்படுத்தும் அமைப்பினை பயன்படுத்த விரும்புகிறார்கள் எனில் தங்கள் வாகனங்கள் பற்றிய விவரங்களை முன்கூட்டியே அந்த செயல்படுத்தும் நஉஅ விற்கு அனுப்பிவிட வேண்டும்.

4. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தொகுப்பில் உள்ள செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பிற்கு கீழ்க்கண்ட ஆவணங்களுடன் விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும்:

- வாகனம் (ங்கள்) தொடர்பான ஆவணங்கள் – பதிவுச்சான்று, தகுதிச்சான்று, சாலை வரி இரசீது, காப்பீடு சான்று மற்றும் பொருட்கள் ஏற்றிச்செல்ல அனுமதிப்பத்திரம்.
- வாகனம்(ங்கள்) புகைப்படம் – முன்பக்க தோற்றம், பின்பக்க தோற்றம் வண்டி எண் தெரியும் வகையில் இருக்க வேண்டும்.
- பணியிலுள்ள வாகன ஓட்டுநர்கள் மற்றும் பணியாளர்கள் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் நடப்பிலுள்ள – ஓட்டுநர் உரிமம்;, அரசு வழங்கிய புகைப்பட அடையாள அட்டை மற்றும் முகவரிச்சான்று, மருத்துவச்சான்றிதழ் (மாநில அரசு பதிவு பெற்ற மருத்துவரால் வழங்கப்பட்டது) ஆகியவை.

- பணியில் அமர்த்தப்பட்டுள்ள ஓட்டுநர் மற்றும் பணியாளர்களுக்கு ரூபாய் 10 இலட்சத்துக்கு தனிநபர் விபத்துக் காப்பீட்டு ஆவணம்.
- பாதாள சாக்கடை (செரிமானத்தொட்டி உட்பட) அமைப்பை சுத்தப்படுத்தவும் பராமரிக்கவும் வெளியாட்களிடம் ஒப்படைப்பதாக இருந்தால் ஒப்பந்ததாரர் அதற்காக குறிப்பிட்ட படிவத்தில் உறுதிப்பத்திரம் தயாரித்து கையெழுத்திட்டு கொடுக்க வேண்டும்.
- உரிமக்கட்டணமான ரூபாய் 1,000 (ரூபாய் ஆயிரம் மட்டும்) செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு பரிந்துரைக்கும் முறையில் செலுத்த வேண்டும்.

5. உரிமம் பெற்றவர் அனைத்து ஆவணங்களின் அசலை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பித்த ஆவணங்களில் ஏதாவது ஆவணம் உரிமம் உள்ள காலத்தில் காலாவதியாவதாயிருந்தால் உரிமம் பெற்றவர புதிய சான்றிதழ் ஆவணத்தை காலாவதி ஆன அன்றோ அல்லது 30 நாட்களுக்குள்ளோ புதுப்பித்து சமர்ப்பிக்க வேண்டும். பணியாளர்களில் ஏதாவது மாற்றம் இருந்தால் புதிய ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் மற்றும் புதிதாக வேலையில் அமர்த்தப்பட்ட பிற பணியாளர்களின் அரசு வழங்கிய புகைப்பட அடையாள அட்டை மற்றும் முகவரிச்சான்று ஆகியவற்றை பணியமர்த்திய 30 நாட்களுக்குள் சமர்பிக்க வேண்டும். விண்ணப்பம் சமர்ப்பித்தபின் செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு வழங்கிய ஏற்பு சீட்டு, உரிமக்கட்டண இரசீது மற்றும் பிற ஆவணங்கள் ஆகியவற்றை உரிமம் கிடைக்கும் வரை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். விண்ணப்பதாரர் சமர்பித்த ஆவணங்கள் மற்றும் தகவல்கள் விண்ணபத்தை பரிசீலிக்க போதுமானதாக இல்லாதபோது செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விண்ணப்பத்தை பெற்றுக்கொண்ட 15 நாட்களுக்குள் தேவைப்படும் தகவல்களை ஒப்படைக்கக் கோரலாம். விண்ணப்பம் மற்றும் பிற ஆவணங்கள் சமர்ப்பித்த 30 நாட்களுக்குள் செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு உரிமம் வழங்க வேண்டும்.

6. விண்ணப்பங்கள் வரையறுக்கப்பட்ட சட்டங்கள் அல்லது விதிமுறைகளுக்கு உட்பட்டு இல்லாவிட்டால் அல்லது விண்ணபதாரர் கேட்கப்பட்ட கூடுதல் தகவல்களை வழங்கத்தவறினால் அல்லது வழங்கப்பட்ட ஆவணங்கள் நம்பகத்தன்மை அற்றதாக இருந்தால் செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அந்த காரணங்களை எழுத்து பூர்வமாக பதிவு செய்துவிட்டு விண்ணபத்தை நிராகரிக்கலாம் அல்லது உரிமத்தை புதுப்பிக்க மறுக்கலாம். மனுதாரருக்கு அதன் நகல் ஒன்றும் வழங்கப்பட வேண்டும். விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட அல்லது புதுப்பிக்க மறுக்கப்பட்ட 15 நாட்களுக்குள் விண்ணபதாரர் தனது தரப்பு நியாயத்தோடு செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பிற்கு மேல்முறையீடு செய்யலாம். முதல் முறை முறையீட்டு மனுவை பெற்றுக்கொண்ட 30 நாட்களுக்குள் உடனடியாக அதன் மேல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அடுத்த கட்ட மேல் முறையீட்டை மேல் முறையீடு செய்யப்பட்ட 45 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க நகராட்சியாக இருந்தால் அதன் மண்டல நகராட்சி இயக்குநர் அலுவலகத்திலும், பேரூராட்சியாக இருந்தால் உதவி இயக்குநர்,

பேரூராட்சியிடமும், மாநகராட்சியாக இருந்தால் நகராட்சி நிர்வாக ஆணையரிடமும் எந்தவித கட்டணமும் இல்லாமல் சமர்ப்பிக்கலாம்.

7. முன்னரே திரும்பப்பெற்றாலொழிய வழங்கப்பட்ட உரிமம் விண்ணப்ப தேதியிட்ட நிதியாண்டு முழுமைக்கும் செல்லத்தக்கதாக இருக்கும். வழங்கப்பட்ட உரிமம் நன்கு தெரியும் வகையில் வாகனத்தின் காற்றுத்தடுப்பான் ஸ்டிக்கருடன் வாகனத்தில்(களில்) ஒட்டப்பட்டிருக்க வேண்டும்.
8. உரிமத்தை புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தை அதற்குரிய படிவத்தில் செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கு உரிமம் முடிவுறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே அளிக்க வேண்டும். புதிய விண்ணப்பத்திற்கு உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளே இதற்கும் பொருந்தும். செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விண்ணப்பத்தை பெற்றுக்கொண்ட 30 நாட்களுக்குள் முந்தைய உரிமம் முடிவடைவதற்கு முன்னதாகவே புதுப்பிக்கும் விண்ணப்பத்தை பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். உரிமம் புதுப்பித்தலுக்கு செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு பரிந்துரைக்கும் கட்டணத்தை விண்ணப்பதாரர் செலுத்த வேண்டும்.

9. பெறப்பட்ட உரிமம் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தொகுப்பில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் அனைத்து கட்டிடங்களிலும், அவை வீடுகளாக இருந்தாலும், வணிக வளாகங்களாக இருந்தாலும் அல்லது நிறுவனங்களாக இருந்தாலும் அவை அனைத்திலும் உள்ள கசடு கழிவு மற்றும் கழிவு நீர்களை அகற்றவும், எடுத்துச்செல்லவும் அப்புறப்படுத்தவும் செல்லத்தக்கதாகும். இந்த உரிமம் தொழிற்சாலை கழிவுகளையோ அல்லது எந்தவகையான தொழிற்சாலை கழிவுகள் கலக்கப்பட்ட கழிவுகளையோஎடுத்துச்செல்ல அனுமதிக்கவில்லை. உரிமம் பெற்றவர் தொழிற்சாலை கழிவுகளையோ, தொழிற்சாலை கழிவுகள் கலந்த கழிவுகளையோ வாகனத்தில் ஏற்றிச்செல்வது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறுவதாகும்.

10. தேவை ஏற்படும்போது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தொகுப்பில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு நிர்வாக அதிகாரிகள் கேட்கும்போது உரிமம் பெற்றவர் தனது உரிமத்தை காண்பிக்க வேண்டும்.

11. கட்டிட உரிமையாளர்கள் அல்லது குடியிருப்போர் அல்லது ஒரு பகுதியை பயன்படுத்துவோர் உரிமம் பெற்ற இயக்குநர்கள் மூலம் கசடு கழிவு மற்றும் கழிவு நீரை சேகரித்து எடுத்துச்செல்வதை உறுதி செய்ய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தொகுப்பில் உள்ள நகர உள்ளாட்சிகள் தங்களிடம் உரிமம் பெற்ற இயக்குநர்களின் பட்டியலை அவ்வப்போது வெளியிடுவார்கள். இதில் பொதுமக்களின் புகார்கள்/குறைகள் தீர்க்கும் வழிமுறைகள் இயக்குநர்கள் ஏதாவது அத்துமீறல்களில் ஈடுபட்டால் அதைப்பற்றி புகாரளிக்கும் முறை ஆகியவை பற்றிய தகவல்கள் இருக்கும்.

12. உரிமம் பெற்றவர் கழிவு சேகரிக்கும் போது ஏதாவது சம்பவங்கள் ஏற்பட்டால் அவற்றை உடனடியாக அருகிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தொகுப்பில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கு தெரியப்படுத்த வேண்டும்.

13. செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் மூலம் உரிமம் வழங்கப்பட்டதாலேயே பிற விதிமுறைகள், சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகளின் அடிப்படையில் நடத்தப்படும் தொழில்கள் அல்லது விற்பனைக்கு தேவையான உரிமங்கள் அல்லது அனுமதிகள் பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டதாக கொள்ளக்கூடாது.

14. உரிமம் பெற்றவர் சேகரித்த கசடு கழிவு மற்றும் கழிவு நீரை செயல்படுத்தும் நஉஅ அனுமதித்துள்ள அப்புறப்படுத்தும் நிலையத்தில் அது செயல்படும் நேரத்தில் அப்புறப்படுத்தவேண்டும்.

15. உரிமம் பெற்றவர் கசடு கழிவு மற்றும் கழிவு நீரை அப்புறப்படுத்த, அப்புறப்படுத்தும் நிலையத்தை செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதித்துள்ள பயன்பாட்டு கட்டணமான ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்) செலுத்த ஒப்புக்கொண்டுள்ளார். இந்த பயன்பாட்டு கட்டணம் திருத்தத்திற்கு உட்பட்டது மற்றும் செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பால் அவ்வப்போது மாற்றம் அறிவிக்கப்படும்.

16. உரிமம் பெற்றவர் கசடு கழிவு மற்றும் கழிவு நீரை நகர உள்ளாட்சி தொகுப்பில் உள்ள கசடு கழிவு மற்றும் கழிவு நீரை அப்புறப்படுத்தும் நிலையம் தவிர வேறு எங்காவது கொட்டினால் அது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறுவதாகும்.

17. உரிமம் பெற்றவர் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறியதாகத் தெரிந்தால் அவருக்கு அதற்கான விளக்கம் கேட்டு அறிவிப்பு அனுப்பப்படும். பின்னர் ஒவ்வொரு முறை விதிமீறல் நடக்கும்போதும் செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிக்கும் அபராதத்தொகையை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கு செலுத்த வேண்டும். உரிமம் பெற்றவர் தொடர்ந்து அவ்வாறு விதி மீறல்களில் ஈடுபட்டால் செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அதற்கான விளக்கம் கேட்டு அறிவிப்பு அனுப்பும் மற்றும் உரிமத்தை இரத்து செய்யவும் கூடும். வாகன இயக்குநர் மற்றும் வாகன உரிமையாளர் இருவரும் விதிமீறலுக்கு பொறுப்பு ஏற்க வேண்டும்.

18. உரிமம் பெற்றவர் ஒவ்வொரு முறை வாகனத்தில் கழிவு ஏற்றி எடுத்துச்சென்று அப்புறப்படுத்தும் போதும் அந்தத் தகவலை அதற்காக செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பால் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஒரு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். அந்த பதிவேட்டை ஒவ்வொரு காலாண்டும் செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

19. உரிமம் பெற்றவர் கழிவு அப்புறப்படுத்தும் நிலையத்தில் அவர் எடுத்துச்செல்லும் கசடு கழிவு மற்றும் கழிவு நீரின் தரத்தை ஆய்வு செய்வதை உறுதி செய்ய வேண்டும்.

அத்துடன் நிலைய பொறுப்பாளரிடம் கசடு கழிவு மற்றும் கழிவு நீர் எடுத்து வரப்பட்ட இடம் மற்றும் பகுதி ஆகியவை பற்றிய தகவல்களை தெரிவிக்க வேண்டும்.

20. உரிமம் பெற்றவர் கசடு கழிவு மற்றும் கழிவு நீர் ஏற்றிச்செல்ல பயன்படுத்தும் வாகனத்தில் செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அங்கீகரித்த வாகன போக்குவரத்தை கண்காணிக்கும் ஜிபிஎஸ் கருவியை பொருத்தியிருக்க வேண்டும். உரிமம் பெற்றவர் ஜிபிஎஸ் கண்காணிப்பு வசதியை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தொகுப்பில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். உரிமம் பெற்றவர் ஜிபிஎஸ் கருவியை எப்போதும் செயல்படும் நிலையில் வைத்து தகவல்கள் தடையின்றி செல்ல வகை செய்ய வேண்டும். தகவல்கள் பெறுவதில் தடைகள் இருப்பது விதி மீறலாக கருதப்படும் (மேலே எண் 17ல் விளக்கப்பட்டுள்ளபடி).

21. உரிமம் பெற்றவர் குறிப்பிட்ட வாகனம்(ங்களை) நன்றாக வேலை செய்யக்கூடிய நிலையில் வைத்து பராமரிக்க வேண்டும், இதன் மூலம் விபத்துகள் ஏற்படுவதை தவிர்க்க முடியும்;. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தொகுப்பில் உள்ள நகர உள்ளாட்சி அமைப்பின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் அதிகாரிகள் அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு குறிப்பிடப்பட்ட வாகனங்கள் தரமாக உள்ளதையும் நல்ல முறையில் பராமரிக்கப்படுவதையும் ஒழுங்குபடுத்த வேண்டும்.

22. உரிமம் பெற்றவர் கசடு கழிவு மற்றும் கழிவு நீரை சேகரிக்கும் இடத்திலும் ஏற்றிச்செல்லும்போதும் அப்புறப்படுத்தும் இடத்திலும் சிறிதளவும் கசிவு இல்லாமல்/சிந்தாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். எதிர்பாராத விதமாக விபத்தில் கழிவு நீர் சிந்திவிட்டால் அதை உடனே தடுத்து நிறுத்தி, சுத்தம் செய்து முடிந்த அளவு சுற்றுச்சூழல் மாசு அடைவதை குறைக்க வேண்டும். சிந்திய இடத்திலுள்ள கழிவு நீரை உடனடியாக அகற்ற வேண்டும். சம்பவம் நடைபெற்ற 24 மணி நேரத்துக்குள் உரிமம் பெற்றவர் அருகிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தொகுப்பில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கு கழிவு நீர் சிந்திய தகவலையும் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் தெரிவிக்க வேண்டும்.

23. உரிமம் பெற்றவர் தன்னிடம் பணிபுரியும் ஓட்டுநர் மற்றும் பணியாளர்கள் அனைவரும் தொடர்ந்து பயிற்சி எடுக்கவும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தொகுப்பில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கள் மூலம் நடத்தப்படும்; பிற செயல்பாடுகளிலும் கலந்துகொள்ளச்செய்ய வேண்டும்.

24. உரிமம் பெற்றவர் தன்னிடம் பணிபுரியும் ஓட்டுநர் மற்றும் பணியாளர்கள் அனைவரும் 10.05.2019 தேதியிட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கை ந.க.எண். 11333/2015/J2- ல் குறிப்பிடப்பட்டுள்ள பாதாள சாக்கடை மற்றும் செரிமானத்தொட்டி – இயந்திரங்கள் மூலம் சுத்தப்படுத்துதலுக்கான தரப்படுத்தப்பட்ட இயக்க செயல்முறைகள் மற்றும் அவ்வப்போது வழங்கப்படும் வழிமுறைகள் ஆகியவற்றை முறையாக செயல்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும். அத்துடன் பாதுகாப்பு உபகரணங்களை வாங்கி கசடுகழிவு மற்றும் கழிவு நீரை சேகரித்தல்,

எடுத்துச்செல்லுதல் மற்றும் அப்புறப்படுத்துதல் ஆகிய பணிகளைச்செய்யும் போது முறையாக பயன்படுத்த வேண்டும்.

25. உரிமம் பெற்றவர் தன்னிடம் பணிபுரியும் ஓட்டுநர் மற்றும் பணியாளர்கள் அனைவரும் மாநில அரசு அனுமதி பெற்ற மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வதை உறுதி செய்ய வேண்டும். மருத்துவப்பரிசோதனை ஆவணங்களை உரிமம் புதுப்பிக்க விண்ணப்பிக்கும் போது செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

26. உரிமம் பெற்றவர் தன்னிடம் பணியில் அமர்த்தப்பட்டுள்ள ஓட்டுநர் மற்றும் பணியாளர்களுக்கு ரூபாய் 10 இலட்சத்துக்கு தனிநபர் விபத்து காப்பீடு செய்து காப்பீட்டு ஆவணத்தை உரிமம் புதுப்பிக்க விண்ணப்பிக்கும் போது செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

27. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 26.11.2010 தேதியிட்ட அ.ஆ (நிலை) எண். 293–ல் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகள் – பணியாளர்கள் பாதாள சாக்கடை அமைப்பு மற்றும் செரிமானத் தொட்டிக்கு உள்ளே நுழைவதற்கு தடை மற்றும் கசடு கழிவு அப்புறப்படுத்த மனிதர்களை பணியமர்த்த தடைவிதித்தல் மற்றும் துப்புறவுப்பணியாளர்கள் மறுவாழ்வு சட்டம்–2013 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கை 10.5.2019 தேதியிட்ட சுற்றறிக்கை ந.க.எண். 11333/ 2015/ J2- ல் ஆகியவற்றை உரிமம் பெற்றவர் மீறும்போது அவருக்கு அதற்கான விளக்கம் கேட்டு செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அறிவிப்பு அனுப்பும். மாநில அரசு அவ்வப்போது செய்யும் அறிவிப்பின்படி அபராதம் விதிக்கப்படும். உரிமத்தை திரும்பப்பெறவும் வாய்ப்புள்ளது.

28. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 01.09.2014 தேதியிட்ட அ.ஆ (நிலை) எண். 106, ல் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகள் – தமிழ்நாடு அரசின் நகரம் மற்றும் கிராமங்களுக்கான கசடுகழிவுமேலாண்மை செயல்முறை வழிகாட்டி, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளாக இருந்தால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்–1920 (தமிழ்நாடு சட்டம் 5, 1920) மாநகராட்சியாக இருந்தால் மாநகராட்சி சட்டம் மற்றும் இந்த உரிமத்தின் மூலம் செயல்படுத்தப்படும் செயல்பாடுகள் தொடர்பாக அவ்வப்போது வெளியிடப்படும் துணைவிதிகள் மற்றும் சட்டவிதிகள் ஆகியவற்றை உரிமம் பெற்றவர் பின்பற்ற வேண்டும்.

29. இந்த உரிமத்தின் எந்தவொரு நிபந்தனையையும் திருத்துவதற்கான உரிமை செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கு உள்ளது. இந்த உரிமம் செல்லத்தக்க காலத்தில் இந்த உரிமம் தொடர்பான மேலும் நிபந்தனைகள் விதிப்பதற்கும் உரிமை பெற்றுள்ளது.

மேலே கூறப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தெளிவாக புரிந்து கொள்ளப்பட்டன. மேலும் அவற்றை முழுமையாக பின்பற்ற ஒப்புக் கொள்ளப்படுகின்றன.

தேதி: பெயர்: கையொப்பம்:

| ஒட்டுநர்/பணியாளர் விவரங்கள் (நிரப்ப வேண்டும்) | | |
|---|---|---|
| வ.எண் | முழுப்பெயர் | அரசு வழங்கிய புகைப்பட அடையாள அட்டை மற்றும் முகவரிச்சான்றின் வகை மற்றும் எண். |
| | | |
| | | |
| | | |
| | | |

**பாதாள சாக்கடை அமைப்பை (செரிமானத் தொட்டியுடன் சேர்த்து) சுத்தப்படுத்தவும் பராமரிக்கவும் வெளியாட்களிடம் ஒப்படைப்பதாக இருந்தால் அதற்காக ஒப்பந்ததாரர் அளிக்க வேண்டிய உறுதிப்பத்திரப்படிவம்**

(1) நான் (ஒப்பந்ததாரரின் பெயர், வயது, தந்தை பெயர்) 20.11.2008 தேதியிட்ட W.P.No.24403/2008 எண்ணுள்ள மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் தமிழக அரசின் 26.11.2010 தேதியிட்ட அரசாணை (நிலை) எண் .293, M.A & W.S (MW) உத்தரவான தூய்மைபணியாளர்கள் பாதாள சாக்கடை அமைப்பு மற்றும் செரிமானத் தொட்டிக்கு உள்ளே நுழைவதற்கு தடை மற்றும் கசடு கழிவு அப்புறப்படுத்த மனிதர்களை பணியமர்த்த தடைவிதித்தல் ஆகியவற்றை தெரிந்திருக்கிறேன். நான் இது தொடர்பான உயர் நீதிமன்ற உத்தரவு மற்றும் அரசாணையை மதித்து செயல்படுவேன் என்று உறுதி கூறுகிறேன்.

(2) நான் 20.11.2008 தேதியிட்ட W.P.No.24403/2008 எண்ணுள்ள சென்னை உயர்நீதி மன்ற உத்தரவில் அனுமதிக்கப்பட்ட 4 சந்தர்ப்பங்கள் தவிர வேறு காரணங்களுக்காக பாதாள சாக்கடை அமைப்பு மற்றும் செரிமானத் தொட்டியை தூய்மை செய்யவோ பராமரிக்கவோ தூய்மைப்பணியாளர்களை உள்ளே நுழைவதற்கு அனுமதிக்கமாட்டேன். அத்தகைய 4 சந்தர்ப்பங்களிலும் கூட தூய்மைப்பணியாளர்கள் தேவையான அளவு பாதுகாப்புக்கருவிகளுடன் தகுதிபெற்ற பணியாளர்களின் மேற்பார்வையில் நச்சு வாயுக்கள் உள்ளதா என்று பரிசோதித்த பின்னர் அனைத்து பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்த பின்னரே அனுமதிக்க வேண்டும் என்பதை அறிந்திருக்கிறேன்.

(3) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் தமிழக அரசின் அரசாணை ஆகியவற்றை மீறுவது கசடுகழிவு அப்புறப்படுத்த மனிதர்களை பணியமர்த்தல் மற்றும் உலர் கழிப்பறைகள் கட்டுதல் (தடுப்பு) சட்டம்– 1993 தொகுதி –1 ன் அடிப்படையில் தண்டனைக்குரியது என்பதை நான் அறிவேன்.

ஒப்பந்ததாரர் கையொப்பம்

| வ.எண் | படிவம் /ஆவணம் | வாகனம்(ங்கள்) தொடர்பான சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | பதிவுச்சான்றிதழ் | | | | | |
| 2. | தகுதிச்சான்றிதழ் | | | | | |
| 3. | சாலை வரி இரசீது | | | | | |
| 4. | காப்பீடு சான்று | | | | | |
| 5. | பொருட்கள் ஏற்றிச்செல்ல அனுமதிப்பத்திரம் | | | | | |
| 6. | வாகனம்(ங்கள்) புகைப்படம் – முன்பக்க தோற்றம், பக்கவாட்டுத் தோற்றம் வண்டி எண் தெரியும் வகையில் உள்ளது | | | | | |
| 7. | அரசு வழங்கியபுகைப்பட அடையாள அட்டை மற்றும் முகவரிச்சான்று – ஓட்டுநர் மற்றும் பணியாளர்களுக்கு | | | | | |
| 8. | மருத்துவச்சான்றிதழ் – ஓட்டுநர் மற்றும் பணியாளர்களுக்கு | | | | | |
| 9. | தனிநபர் விபத்து காப்பீட்டு ஆவணம் – ஓட்டுநர் மற்றும் பணியாளர்களுக்கு | | | | | |
| 10 | ஓட்டுநர் உரிமம்(ங்கள்) | | | | | |
| 11. | பாதாள சாக்கடை (செரிமானத் தொட்டியும் சேர்த்து) அமைப்பை சுத்தப்படுத்தவும் பராமரிக்கவும் வெளியாட்களிடம் ஒப்படைத்திருந்தால் அதற்காக குறிப்பிட்ட படிவத்தில் ஒப்பந்ததாரர் கையெழுத்திட்டு வழங்கிய உறுதிப்பத்திரம் | | | | | |

இங்கு இணைக்கப்பட்ட மேலே விவரிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் எனது அறிவுக்கு எட்டிய வரை சரியாக உள்ளன என்று நான் சான்றளிக்கிறேன். இங்கு எந்த தகவல்களும் என்னால் மறைக்கப்படவில்லை.

தேதி: விண்ணப்பதாரரின் கையொப்பம்

குறிப்பு: தயவு செய்து கோப்பில் சான்றொப்பமிட்ட நகல்களை இணைத்துவிட்டு அசல் ஆவணங்களை நேரில் கொண்டு வரவும்.

**அலுவலக பயன்பாட்டிற்குமட்டும்**

மறுப்புகள்

அ. கீழே குறிப்பிடப்பட்டுள்ள படிவங்கள்/ஆவணங்கள் இணைக்கப்படவில்லை/கோப்பில் முழுமையாக இல்லை:

| வ.எண். | படிவம் / ஆவணம் |
|---|---|
| 1. | |
| **2.** | |
| **3.** | |
| **4.** | |
| **5.** | |
| வேறு ஏதேனும் மறுப்புகள்/கவனித்தவைகள் | |

ஆ.

நான் இந்த கோப்பை பரிசீலனை செய்தேன் என்றும் இது சரியாக உள்ளது என்றும் சான்றளிக்கிறேன்.

தேதி: நிர்வாக அதிகாரியின் கையொப்பம் பத்மனாபபுரம் நகராட்சி

தனியார் இயக்குநர் உரிமத்துக்கான படிவ வடிவம்

பத்மனாபபுரம் நகராட்சி

கசடு கழிவு மற்றும் கழிவு நீர்சேகரித்தல், எடுத்துச்செல்லுதல் மற்றும் அப்புறப்படுத்துதலுக்கு தனியார்இயக்குநர்உரிமம் பெற விண்ணப்பிப்பதற்கான படிவ வடிவம்

தற்போதுள்ள நகர உள்ளாட்சி அமைப்பின் (இதற்கேற்ற மன்ற தீர்மானம்(ங்கள்) /சட்ட அறிவிப்பு/அரசாணை ஆகியவற்றை குறிப்பிடவும்) அனைத்து விதிமுறைகள் மற்றும் இந்த உரிமத்துடன் தொடர்புடைய தமிழக அரசின் விதிமுறைகள் மற்றும் பொருந்தக்கூடிய விதிகள், சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் நிபந்தனைகளுக்கு இணங்க இந்த அனுமதி வழங்கப்படுகிறது:

உரிம எண்:

இந்த உரிமத்தில் உள்ளடங்கிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கள்; : பத்மனாபபுரம் நகராட்சி

உரிமம் வைத்திருப்பவர்: இயக்குநரின் பெயர்மற்றும் முகவரி,

வாகன உரிமம் எண்(கள்)

1.2.3.4.5.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தொகுப்பின் பெயரை இணைக்கவும்,இணைந்துள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் எல்லைகளுக்குட்பட்ட வீடுகள், வணிக நிலையங்கள் அல்லது நிறுவனங்களாக பயன்படுத்தப்படும் கட்டிடங்களில் கசடு கழிவு மற்றும் கழிவு நீரை சேகரித்து எடுத்துச்சென்று அப்புறப்படுத்துவதற்கு

இந்த உரிமம் கீழே கொடுக்கப்பட்டுள்ள காலவரை வரை செல்லத்தக்கதாகும். இதுவிதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறி செயல்படும்போது இடைநிறுத்தம் செய்யப்படலாம் அல்லது திரும்பப் பெறப்படலாம். இந்த உரிமம் உரிமை மாற்றம் செய்யத்தக்கதல்ல.

செல்லுபடியாகும் காலம்: __/__/____ முதல் __/__/____ வரை

செயல் அதிகாரியின் கையொப்பம்
பத்மனாபபுரம் நகராட்சி

Commissioner,
Padmanabhapuram Municipality